# கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

திரு செ.ம.வேலுசாமி
வணக்கத்திற்குரிய மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
நிலைக்குழு தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
வார்டுக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்
(சிங்காநல்லூர் , கோவை தெற்கு,
கோவை வடக்கு, தொண்டாமுத்தூர்
கவுண்டம்பாளையம், கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்
(கோவை , மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

**ந.க.எண் : 3392/ 2012 / எம்சி. 8 நாள் : 26.03.2012**

**அய்யா /அம்மா,**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மாமன்ற அவசரக் கூட்டம் நடைபெறுதல் - நிகழ்ச்சி நிரல் அனுப்புதல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற 28.03.2012 புதன்கிழமை காலை 10.30 மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத் தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சி நிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) செ.ம. வேலுசாமி
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

மாமன்ற செயலாளர்

நகல் :

ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற அவசரக் கூட்டம் - மார்ச் 2012

## நிகழ்ச்சி நிரல்


| பொருளடக்கம் | | பக்கம் எண் |
|---|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி | | 1 |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் | |
| 1 | பொறியியல் பிரிவு - புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் -5 வார்டுகளில் மழைநீர் வடிகால் பணி மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக | 3 |
| 2 | பொறியியல் பிரிவு - புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் -7 வார்டுகளில் சாலைப் பணிகள் மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி ஏற்றல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக | 4 |
| 3 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 73 – சுங்கம் பகுதியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டக் கூடம் கட்டுதல் பணி - ஒப்பந்தப்புள்ளி கோரியது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | 6 |
| 4 | பொறியியல் பிரிவு - வார்டு எண் 80- தியாகி குமரன் வீதியில் நடைபாதை அமைத்தல் பணி மேற்கொள்ளுதல் - ஒப்பந்தப்புள்ளி கோரியது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | 6 |
| 5 | பொறியியல் பிரிவு - புதியதாக இணைக்கப்பட்ட குறிச்சி பகுதியில் எரிவாயு மயானம் அமைத்தல் பணி - ஒப்பந்தப்புள்ளி கோரியது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | 7 |
| 6 | பொறியியல் பிரிவு - புதியதாக இணைக்கப்பட்ட வீரகேரளம் பகுதியில் எரிவாயு மயானம் அமைத்தல் பணி - ஒப்பந்தப்புள்ளி கோரியது - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | 7 |
| 7 | Jnnurm – பாதாள சாக்கடைத் திட்டம் - கழிவுநீர் குழாய்கள் அமைத்தல் - ரயில்வே மற்றும் நெடுஞ்சாலைத் துறைக்கு சாலை சீரமைப்புக் கட்டணம் செலுத்துதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | 8 |
| 8 | பணியமைப்பு - விஷவாயு தாக்கி எதிர்பாராத விதமாக மரண்மடைந்த திரு. எ. கார்த்திக் என்பவரது தங்கையும், திரு. அய்யாசாமி அவர்களின் மகளுமான செல்வி அ.கிருத்திகாவிற்கு மாநகராட்சியில் தேர்ச்சி திறனற்ற பணியாளர் பணியிடம் வழங்குதல் - அரசுக்கு பரிந்துரைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | 9 |
| 9 | பொறியியல் பிரிவு - ஐந்து மண்டல தலைவர்களுக்கு வாக்கி டாக்கி வாங்கி வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | 9 |
| 10 | பொறியியல் பிரிவு - புதியதாக இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகள் - மழைநீர் வடிகால் பணி மேற்கொள்ளுதல் - 22 பணிகள் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக | 10 |
| 11 | பொது சுகாதாரப் பிரிவு - கோவை தெற்கு மற்றும் வடக்கு வட்டம் மற்றும் முதலமைச்சர் தனிப்பிரிவிலிருந்து உதவித்தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் - வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்த்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | 13 |

| | | |
|---|---|---|
| 12 | கிழக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வருடாந்திர குத்தகை இனங்கள் - 2012 முதல் 2015 வரை - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்படைப்பு செய்தல்- மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | **14** |
| 13 | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - குத்தகை இனம் - காந்திபுரம் மத்திய பேருந்து நிலைய நான்கு தளங்களில் உள்ள அறைகளில் பயணிகள் இரவு தங்கும் விடுதி – ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – மறுஏலம் கோருதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | **14** |
| 14 | வடக்கு மண்டலம் - வருவாய் பிரிவு - குத்தகை இனம் - துடியலூர் இரு சக்கர வாகன நிறுத்துமிடம் - 2012 முதல் 2015 வரை - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக | **15** |
| 15 | மேற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - 2012 முதல் 2015 ம் ஆண்டிற்கான குத்தகை உரிம இனங்கள் - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக | **15** |
| 16 | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் - 10X16 காலியிடம் - நவீன மீன் விற்பனை நிலையம் அமைத்தல் - தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | **17** |
| 17 | மத்திய மண்டலம் - வருவாய் பிரிவு - வார்டு எண் 25 – பூமார்க்கெட் அருகில் தரைத் தளம் மற்றும் முதல் தளத்தில் கட்டப்பட்டுள்ள கடைகளை மின்ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக | **17** |
| 18 | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - வருடாந்திர குத்தகை இனங்கள் - 2012 முதல் 2015 வரை - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | **18** |
| 19 | தெற்கு மண்டலம் - வருவாய் பிரிவு - 2012-2015 ம் ஆண்டிற்கான குத்தகை இனங்கள் - சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் பகுதியில் உள்ள வணிக வளாகக் கடைகள் - 5% உயர்வு செய்து உரிமம் புதுப்பித்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக | **19** |
| 20 | பொறியியல் பிரிவு - தானே புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வாடகை அடிப்படையில் 10 எண்ணிக்கையிலான தற்காலிக கழிப்பிடங்கள் அனுப்பப்பட்டது – கட்டணத் தொகையில் விலக்கு அளிக்கக் கோருதல் - மாமன்றம் முடிவு செய்தல் - தொடர்பாக | **23** |
| 21 | பொது சுகாதாரப் பிரிவு - கோவை தெற்கு மற்றும் வடக்கு வட்டத்திலிருந்து முதியோர் உதவித்தொகை கோருவதற்காக பெறப்பட்ட மனுக்கள் - வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்த்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | **23** |
| 22 | நகரமைப்புப் பிரிவு - பேரூர் சாலை – குமாரபாளையம், தெலுங்குபாளையம், செல்வபுரம், பனைமரத்தூர், பூசாரிபாளையம் வழியாக தடாகம் சாலை இணைப்புத் திட்டச்சாலை அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | **24** |
| 23 | நகரமைப்பு பிரிவு - உப்பிலிபாளையம் சாலை திருச்சி சாலை சந்திப்பு குளக்கரை வழியே சிங்காநல்லூர் - வெள்ளலூர் சாலை இணைப்பு திட்ட சாலை அமைத்தல் – மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | **25** |
| 24 | பணியமைப்பு - எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மாநகராட்சி பணி விதிகளுக்கேற்ப சமமான பதவி வழங்கி பணியிடங்களை ஈர்த்துக்கொள்ளல் - அரசுக்கு கருத்துரு அனுப்புதல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | **26** |
| 25 | நகரமைப்புப் பிரிவு - மாநகராட்சி எல்லைக்குள் பேருந்து நிறுத்தும் இடங்களில் தனியார் பங்களிப்புடன் பயணிகள் நிழற்குடை அமைத்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக | **27** |

**நன்றியுரை**

**அ) <u>திருக்குறள்</u>**

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

**(குறள் -666)**

**<u>விளக்கம்</u>**

செயலாற்ற முற்படுபவர்களின் மனம் வினையில் உறுதியான ஈடுபாடு கொண்டால், தாங்கள் விரும்பும் முறையிலேயே வெற்றியடைய முடியும்.

**திருவள்ளுவர்.**

---

**ஆ) <u>தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

**சிறப்பு தீர்மானம் எண் 1**

“ தமிழகத்தில் ஒன்னேகால் இலட்சம் கோடி நிதி பற்றாக்குறையை திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் உருவாக்கிவிட்டுச் சென்ற போதும் கூட, தமிழகத்தை ஒரு முன்னோடி மாநிலமாக உருவாக்குவதற்காக நல்ல திட்டங்களை உருவாக்கி, மனித நேயத்தோடு அல்லும் பகலும் உழைத்து, மற்ற மாநிலங்களுக்கு வழி காட்டுகின்ற வகையில், அண்டை மாநிலம் மட்டும் அல்ல, அண்டை நாட்டைச் சார்ந்த வெளியுறவுத் துறை அமைச்சர் முதற்கொண்டு, நெஞ்சார வாழ்த்துகின்ற வகையில், மக்கள் பணி ஆற்றிக் கொண்டிருக்கிற, மனித நேயமிக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சங்கரன் கோவில் இடைத் தேர்தலில், பெருவாரியான வெற்றி பெற்று, எதிர்த்து நின்ற அனைத்து கட்சிகளும் டெபாசிட் இழக்கின்ற அளவிற்கு மக்களுடைய பேராதரவைப் பெற்று அங்கீகாரம் பெற்றதற்காக இம்மாமன்றம் வாழ்த்தி வணங்கி மகிழ்கிறது” என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**சிறப்பு தீர்மானம் எண் 2**

“இந்த நிதியாண்டில் நல்ல பட்ஜெட்டை வெளியிட்டு, தமிழகத்தை ஒரு முன்னோடி மாநிலமாக உருவாக்கக் கூடிய நல்ல திட்டங்கள் வருங்காலத்தில் இருக்கின்ற அளவிற்கு சிறப்பாக பட்ஜெட் வெளியிட்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுக்கு இம்மாமன்றம் நன்றி தெரிவித்து கொள்கிறது” என்ற சிறப்புத் தீர்மானம் வணக்கத்திற்குரிய மேயர் அவர்களால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

**பொருள் எண் 1**

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அடிப்படை கட்டமைப்பு போன்ற சிறப்பு வசதிகள் ஏற்படுத்துதல் - தமிழக அரசின் சிறப்பு திட்டம் Integrated Urban Development Mission (IUDM) 2011-2012 திட்டத்தின்கீழ் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பு.

--------------

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடித எண்.47923/2011/இ3 நாள் 01-02-2012-ல் கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அடிப்படை கட்டமைப்பு போன்ற சிறப்பு வசதிகள் செய்ய தமிழக அரசின் சிறப்பு திட்டம் Integrated Urban Development Mission (IUDM) 2011-2012 திட்டத்தின்கீழ் மாநகராட்சிக்கு ரூ 2440 இலட்சம் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் பேரூராட்சிகள், சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் போன்ற பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரித்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மாமன்றத் தீர்மானம் எண்.211 நாள் 29-12-2011-ல் மேற்காண் பணிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் மழைநீர் வடிகால் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 06-03-2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1793/12/ எம்.டி.2 | வார்டு எண்.6 தடாகம் சாலை கிழபுறத்தில் டி.வி.எஸ்.நகர் சாலை சந்திப்பு முதல் மாகாளியம்மன் கோவில் சந்திப்பு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 22.30 | 28-02-2012 முதல் அழைப்பு | 1.திரு. கல்யாண குமார், கோயம்புத்தூர் 22.73% அதிகம்<br>2.திரு.கே. கோவிந்தராஜ், கோயம்புத்தூர் 4.72% அதிகம்<br>3.திரு.ஆர்.வி.பி. பாலமுருகன், கோயம்புத்தூர் 9.50% அதிகம் | திரு.கே. கோவிந்தராஜ், கோயம்புத்தூர் 4.68% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 2 | 1792/12/ எம்.டி.2 | வார்டு எண்.8 சக்தி நகர் பிரதான சாலை, ஓனாப்பாளையம் வடக்கு சாலைகளில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் | 22.85 | 28-02-2012 முதல் அழைப்பு | திரு. கோவிந்தராஜ், கோயம்புத்தூர் 4.73 % அதிகம் | திரு. கோவிந்தராஜ், கோயம்புத்தூர் 4.69% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 3 | 1789/12/ எம்.டி.2 | வார்டு எண்.16 மருதமலை சாலையில் தொண்டாமுத்தூர் சாலை சந்திப்பு முதல் கருப்பராயன் கோவில் சாலை சந்திப்பு வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 23.00 | 28-02-2012 முதல் அழைப்பு | திரு. ஆர்.கிருஷ்ணசாமி கோயம்புத்தூர் 8.65 % அதிகம் | திரு. ஆர்.கிருஷ்ணசாமி கோயம்புத்தூர் 4.15 % அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 4 | 1798/12/ எம்.டி.2 | வார்டு எண்.17 மருதமலை சாலையில் தொண்டாமுத்தூர் சாலை சந்திப்பு முதல் காளிதாஸ் தியேட்டர் வரை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 22.50 | 28-02-2012 முதல் அழைப்பு | திரு. ஆர்.கிருஷ்ணசாமி கோயம்புத்தூர் 8.65% அதிகம் | திரு. ஆர்.கிருஷ்ணசாமி கோயம்புத்தூர் 4.10% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 5 | 1794/12/ எம்.டி.3 | வார்டு எண்.5 அசோக் நகர் மேற்கு பிரதான சாலை, நீட்டிப்பு சாலைகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 17.00 | 28-02-2012 முதல் அழைப்பு | 1.திரு.பி.இளங்கோ கோயம்புத்தூர் 4.48% அதிகம்<br>2.திரு. என். குருவாயூரப்பன், கோயம்புத்தூர் 4.73% அதிகம் | 1.திரு.பி.இளங்கோ, கோயம்புத்தூர் 4.39% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

வரிசை எண். 1 முதல் 5 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் 1793/2012/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 275 நாள் 28.03.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அடிப்படை கட்டமைப்பு போன்ற சிறப்பு வசதிகள் ஏற்படுத்துதல் - தமிழக அரசின் சிறப்பு திட்டம் Integrated Urban Development Mission (IUDM) 2011-2012 திட்டத்தின்கீழ் சாலைப் பணிகள் மேற்கொள்ள பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பு.

-------------

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடித எண்.47923/2011/இ3 நாள் 01-02-2012-ல் கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அடிப்படை கட்டமைப்பு போன்ற சிறப்பு வசதிகள் செய்ய தமிழக அரசின் சிறப்பு திட்டம் Integrated Urban Development Mission (IUDM) 2011-2012 திட்டத்தின்கீழ் மாநகராட்சிக்கு ரூ 2440 இலட்சம் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் பேரூராட்சிகள், சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் போன்ற பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரித்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மாமன்றத் தீர்மானம் எண்.211 நாள் 29-12-2011-ல் மேற்காண் பணிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் சாலைப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 06-03-2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1600/12/ எம்.டி.2 | வார்டு எண்.31 அம்மன் நகர் மேற்கு பகுதியில் ஆதி திராவிடர் காலனியில் தார்சாலை அமைத்தல் | 20.40 | 28-02-2012 முதல் அழைப்பு | திரு எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.98% அதிகம் | திரு எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.91% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 2 | 1797/12/ எம்.டி.2 | வார்டு எண்.6 ராஜலட்சுமி காலனி, எம்.ஜி.ஆர்.நகர் குடிசை பகுதிகளில் தார்சாலை அமைத்தல் | 24.20 | 28-02-2012 முதல் அழைப்பு | திரு எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.84% அதிகம் | திரு எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.58% அதிகம (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 3 | 1796/12/ எம்.டி.2 | வார்டு எண்.8 ஜீவா சாலைகளில் தார்சாலை அமைத்தல் | 19.50 | 28-02-2012 முதல் அழைப்பு | திரு எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.90% அதிகம் | திரு எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.68% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 4 | 1099/12/ எம்.டி.4 | வார்டு எண்.95 மற்றும் 96 காந்திஜி சாலையில் பொள்ளாச்சி பிரதான சாலையிலிருந்து சாரதா மில் சாலை வரை தார்சாலை அமைத்தல் | 44.00 | 29-02-2012 முதல் அழைப்பு | திரு எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.60% அதிகம் | திரு எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.49% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 5 | 1795/12/ எம்.டி.3 | வார்டுஎண்.7 பழனியம்மாள் மனைப்பிரிவு பிரதான சாலை குறுக்குச் சாலைகள் வ.உ.சி. நகர் மேற்கு பிரதான சாலைகளில் தார்சாலை அமைத்தல் | 50.00 | 29-02-2012 முதல் அழைப்பு | திரு எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.78% அதிகம் | திரு எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.75% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 6 | 1794/12/ எம்.டி.2 | வார்டு எண்.3 சூர்யலட்சுமி கார்டன், கே.என்.ஜி.புதூர் சுப்ரமணியம் பள்ளி பகுதிகளில் தார்சாலை அமைத்தல் | 26.10 | 29-02-2012 முதல் அழைப்பு | திரு எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.92% அதிகம் | திரு எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.82% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 7 | 1723/12/ எம்.டி.3 | வார்டு எண்.32 சேரன் மாநகர் (வி.கே.மெயின் சாலை முதல் 7வது பஸ் நிலையம் வரை) பிரதான சாலைகளில் தார்சாலை அமைத்தல் | 62.80 | 29-02-2012 முதல் அழைப்பு | திரு எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.98% அதிகம் | திரு எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.90% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

வரிசை எண். 1 முதல் 7 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் 1600/2012/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 276 நாள் 28.03.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள சட்டமன்ற உறுப்பினா் மேம்பாட்டு நிதியின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு கீழ்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 10.02.2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரா் |
|---|---|---|---|---|---|---|
| | **சட்டமன்ற உறுப்பினா் நிதி** | | | | | |
| 1 | 1788/11/ எம்.டி.5 | வாா்டு எண். 73 திட்டம் III ன் கீழ் மைய எண் 6, 7 சுங்கம் பகுதியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட கூடம் கட்டுதல் | **13.80** | **31.01.2012 நான்காவது அழைப்பு** | தி/ள் என்.பி.கே. அசோசியேட்ஸ், கோயம்புத்தூா் **4.87% அதிகம்** | தி/ள் என்.பி.கே. அசோசியேட்ஸ், கோயம்புத்தூா் **4.87% அதிகம்** |

மேற்கண்ட ஒப்புந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- வரிசை எண். 1 ல் உள்ள பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணி அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1788/2010/எம்.டி.5

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 277 நாள் 28.03.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுட கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 14.02.2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரா் |
|---|---|---|---|---|---|---|
| | **பொது நிதி** | | | | | |
| 1 | 11054/10 / எம்.டி.4 | வாா்டு எண். 80 தியாகி குமரன் வீதியில் சுக்கிரவாா் பேட்டை சந்திப்பு முதல் இடையா் வீதிவரை நடைபாதை அமைத்தல் | **12.50** | **26.12.2011 ஒன்பதாவது அழைப்பு** | 1..தி/ள் எம்.எஸ். இன்ஜினிரியா்ஸ் கோயம்புத்தூா் **4.65% அதிகம்** | தி/ள் எம்.எஸ். இன்ஜினிரியா்ஸ் கோயம்புத்தூா் **4.65% அதிகம்** |

மேற்கண்ட ஒப்புந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- வரிசை எண். 1 ல் உள்ள பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணி அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின் படியும் மேற்படி பணிக்கு பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 11054/2010/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 278 நாள் 28.03.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 5

கோவை மாநகராட்சி பகுதியில் இடைநிரப்பு நிதி 2011-12ன் கீழ் குறிச்சி பகுதியில் எரிவாயு மயானம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 02.03.2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| | பொது நிதி | | | | | |
| 1 | 10681/11 / எம்.டி.4 | கோவை மாநகராட்சி புதியதாக இணைக்கப்பட்ட குறிச்சி பகுதியில் எரிவாயு மயானம் அமைத்தல் | 60.00 | 16.02.2012 2-வது அழைப்பு | 1..தி/ள்.சபரி எலெக்ட்ரிக்கல்ஸ், சென்னை-53<br>5.53% அதிகம்<br>2.தி/ள்.எ.ஆர்.எம். இன்ஜினியரிங் கம்பெனி<br>4.49% அதிகம்<br>3..தி/ள்.ஜெனரல் இனிவிரா டெக் (பி) லிட்<br>4.95 %அதிகம் | தி/ள்.ஜெனரல் இன்விரா டெக் (பி) லிட்<br>4.76 %அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

மேற்கண்ட ஒப்புந்தப்புள்ளிகளுக்கு ஒப்புதல் பெற மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :- மேலே அட்டவணையில் உள்ள பணி குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 10681/2011/எம்.டி.4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 279 நாள் 28.03.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 6

பொருள் : வீரகேரளம் பகுதியில் எரிவாயு மயானம் கட்டுவது - இடைநிரப்பு நிதி 2011-2012 - ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

-------------------

கோவை மாநகராட்சி பகுதியில் இடைநிரப்பு நிதி 2011-2012-ன் கீழ் வீரகேரளம் பகுதியில் எரிமயானம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளியினை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 02-03-2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 10680/11/ எம்.டி.2 | கோவை மாநகராட்சி, புதியதாக இணைக்கப்பட்ட வீரகேரளம் பகுதியில் எரிவாயு மயானம் அமைத்தல் | 98.50 | 16-02-2012 2-வது அழைப்பு | 1. தி/ ள் சபரி எலெக்ட்ரிக்கல்ஸ், சென்னை-53<br>**4.60% அதிகம்**<br>2.தி/ள் எ.ஆர்.எம். இன்ஜினியரிங் கம்பெனி<br>**4.45% அதிகம்**<br>3.தி/ள் ஜெனரல் இன்விரா டெக் (பி) லிட்<br>**4.10% அதிகம்** | தி/ள் ஜெனரல் இன்விரா டெக் (பி) லிட்<br>**3.97% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்)** |

அட்டவணையில் உள்ள பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் 4.10 சதவீதம் அதிகம் விலைப்புள்ளி சமா்ப்பித்த தி/ள் ஜெனரல் இன்விரா டெக் (பி) லிட் நிறுவனத்திடம் விலைக்குறைவு செய்து தரக் கோரியதில் இந்நிறுவனத்தாா் மதிப்பீட்டைக் காட்டிலும் 3.97 சதவீதம் மதிப்பீட்டைக் காட்டிலும் அதிகம் என விலைக்குறைப்பு செய்து கொடுத்துள்ளாா்கள். மதிப்பீட்டைக் காட்டிலும் 3.97 கூடுதல் சதவீதம் அளித்துள்ள தி/ள் ஜெனரல் இன்விரா டெக் (பி) லிட் நிறுவனத்தாாின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண் 10680/2011/எம்.டி.2

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 280 நாள் 28.03.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 7

கோயம்புத்தூா் மாநகராட்சியில் ஜவஹா்லால் நேரு தேசிய நகா்ப்புற புனரமைப்புத் திட்டத்தின்கீழ் ரூ. 377.13 கோடி செலவில் பாதாள சாக்கடைத் திட்டம் ஆறு சிப்பங்களாக பிரிக்கப்பட்டு அதில் மூன்று சிப்பப் பணிகள் கழிவுநீா் சேகரிப்பு குழாய்கள் பதிக்கும் பணிகளாகும். இதன் ஒரு சிப்பப் பணியானதும், மண்டலங்கள் I, II, V மற்றும் VI உள்ளடங்கிய சிப்பம் I பணியில் பாதாள சாக்கடை குழாய்கள் மற்றும் கழிவுநீா் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கும் பணி ரூ. 78.05 கோடி செலவில் மேற்கொள்ள தி/ ள். சுப்பையா கன்ஸ்ட்ரக்ஸன்ஸ் கம்பெனி லிட், சென்னை என்ற நிறுவனத்திற்கு பணி ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இப்பணியில் கீழ்கண்ட மாநில நெடுஞ்சாலைகளின் ஓரங்களில் கழிவுநீா் குழாய்கள் 300 மி.மீ விட்டம் முதல் 600 மி.மீ விட்டம் வரையிலான ஆா்.சி.சி. மைப்புகள் அமைக்க வேண்டியுள்ளது. மாநில நெடுஞ்சாலைகளில் பாதாள சாக்கடை குழாய்கள் பதிக்க நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமான சாலையை வெட்டவும், அதற்கான சாலை சீரமைப்புக் கட்டணம் செலுத்தவும் கீழ்க்கண்ட விபரப்படி சீரமைப்புக் கட்டணம் செலுத்த நெடுஞ்சாலைத் துறையினரிடமிருந்து கேட்பு பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | மாநில நெடுஞ்சாலை விபரம் | மாநகராட்சி செலுத்த வேண்டிய சாலை சீரமைப்புக் கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|
| | உதவி கோட்டப் பொறியாளா் (வடக்கு) | |
| 1 | கோவை -தொண்டாமத்துாா் - நரசீபுரம் சாலை கிமீ 0.1/847 – 2/052 மற்றும் சாலையின் இடையில் குறுக்கே வெட்டுதல் கிமீ 0.2/052 ஆகிய பகுதியில் சீரமைப்பு செய்தல் மதிப்பீடு | 8,42,300 |
| 2 | கோவை ஆனைகட்டி சாலை கிமீ 0/947 – 4/346 மற்றும் சாலையின் இடையில் குறுக்கே சாலை வெட்டுதல் கிமீ 0.947, 2/590, 3/216, 3/279, 3/490, 3/570, 3/762, 3/923 & 4/140 ஆகிய பகுதிகளில் சீரமைப்பு செய்தல் மதிப்பீடு | 1,37,84,800 |
| 3 | வடகோவை – மருதமலை சாலை கிமீ 3/2 - 5/120 வரை = 1.92 கிமீ | 80,00,000 |
| | மொத்தம் | 2,26,27,100 |
| | உதவி கோட்டப் பொறியாளா் (தெற்கு) | |
| 4 | கோவை சிறுவாணி சாலை கிமீ. 1/8 – 4/2 = 2.4 கிமீ | 98,00,000 |
| | ஆக மொத்தம் | 3,24,27,100 |

மேற்குறிப்பிட்டுள்ள மாநில நெடுஞ்சாலைகளில் பாதாள சாக்கடைக் குழாய்கள் மற்றும் கழிவு நீா் சேகரிப்புத் தொட்டிகள் அமைக்கவும், சாலை சீரமைப்புக் கட்டணத் தொகையில் ரூ. 2,26,27,100/- (ரூபாய் இரண்டு கோடியே இருபத்தாறு இலட்சத்து இருபத்தேழாயிரத்து நூறு மட்டும்) உதவி கோட்டப் பொறியாளா், நெடுஞ்நசாலைத் துறை (வடக்கு) அவா்களுக்கும், மற்றும் ரூ. 98,00,000/- (ரூபாய் தொன்னூற்று எட்டு இலட்சம் மட்டும்) உதவி கோட்டப் பொறியாளா், நெடுஞ்சாலைத்துறை (தெற்கு) அவா்களுக்கும் செலுத்த வேண்டியுள்ளது.

இச்சிப்பப் பணி மதிப்பீட்டில் தேசிய நெடுஞ்சாலை, மாநில நெடுஞ்சாலை, இரயில்வே கிராஸிங் பகுதியில் கழிவுநீா் குழாய்கள் வெட்டி அமைக்க ரூ. 18.08 கோடி தொகையினை சாலை சீரமைப்புக் கட்டணமாக செலுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே, மாநில நெடுஞ்சாலைகளில் மட்டும் கழிவுநீா் குழாய்கள் பதிக்க பெறப்பட்டுள்ள சாலை சீரமைப்பு கட்டணமாக கேட்பு தொகையினை ரூ. 3.25 கோடி நிதியினை இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகையிலிருந்து செலுத்த மாமன்றத்தின் ஒப்புதல் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அ) பாதாள சாக்கடைத் திட்டத்தில் கழிவுநீர் குழாய் அமைக்கும் இப்பணி மதிப்பீட்டில் ரூ. 18.08 கோடி தொகை நெடுஞ்சாலை, இரயில்வே துறைக்கு சம்பந்தமான பகுதியில் கழிவுநீர் குழாய்கள் பதிக்க உண்டான சீரமைப்புக் கட்டணம் செலுத்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால், எனவே, மாநில நெடுஞ்சாலைகளில் கழிவு நீர் குழாய் பதிக்க பெறப்பட்டுள்ள சாலை சீரமைப்புக் கட்டணமாக கோரப்பட்டுள்ள கேட்புத் தொகையான ரூ. 3.25 கோடியினை செலுத்த மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண் 1684/09/JN4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 281 நாள் 28.03.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

பொருள் - பணியமைப்பு - கோயம்புத்தூர் மாநகராட்சி – விஷவாயு தாக்கி எதிர்பாராத விதமாக மரணமடைந்த திரு. எ. கார்த்திக் என்பவரது தங்கையும், திரு. அய்யாசாமி அவர்களின் மகளுமான செல்வி அ.கிருத்திகாவிற்கு மாநகராட்சியில் தேர்ச்சி திறனற்ற பணியாளர் பணியிடம் வழங்குவது குறித்து அரசுக்கு பரிந்துரைக்க மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிப்பது - தொடர்பாக.

---

திரு. பி. அய்யாசாமி மற்றும் அவரது மனைவி திருமதி. ஆனந்தி ஆகியோரது மகன் திரு. எ. கார்த்திக், ஜென்னி ரெசிடென்சி கிளப்பில் 22.02.2011 ம் தேதியன்று தனியார் மூலம் செப்டிக் டேங்க் சுத்தம் செய்யும்போது எதிர்பாராத விதமாக விஷவாயு தாக்கி இறந்து விட்டார். மேலும் மேற்குறிப்பிட்டவர் மாநகராட்சி பணியாளர் இல்லை. அவர்களது குடும்பம் மிகுந்த வறுமையில் வாடிக் கொண்டிப்பதாலும், அவர்களது குடும்பத்தை காப்பாற்ற வேறு எவரும் இல்லாத காரணத்தாலும், காலம்சென்ற திரு.எ. கார்த்திக் அவர்களின் தங்கையும், திரு. பி. அய்யாசாமி அவர்களது மகளுமான செல்வி அ. கிருத்திகாவிற்கு அவரது கல்வித் தகுதிக்கேற்ப (ஐந்தாம் வகுப்பு தேர்ச்சி) கருணை அடிப்படையில் ஆணையாளர் அவர்களின் 23.02.2012ம் தேதிய குறிப்பின்படி, தேர்ச்சி திறனற்ற பணியாளர் பணியிடத்தில் பணியமர்த்த மாமன்ற ஒப்புதல் பெற்று அரசுக்கு பரிந்துரை செய்ய மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 59/2012/எம்.சி 5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 282 நாள் 28.03.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 9

கோவை மாநகராட்சியில் கடந்த ஆண்டு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து மண்டலத் தலைவர்கள், மண்டல அலுவலர்கள், பொறியாளர்கள் மற்றும் சுகாதார ஆய்வாளர்களை அன்றாட அலுவலகப் பணிகள் குறித்து உடனுக்குடன் எளிதில் தொடர்புகொள்ள வாக்கி டாக்கி வழங்க கோரியுள்ளனர்.

இந்த வாக்கி டாக்கிகள் தோராயமாக ஒரு எண்ணிக்கை ரூ.9000/-ல் D.G.S.&D. விலைகளின்-படி 5 வாக்கி டாக்கிகள் வாங்கி மண்டலத் தலைவர்களின் அலுவலகப் பயன்பாட்டிற்கு வழங்குவது குறித்து அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - மாமன்றத்தின் முடிவிற்கு ந.க. எண் - 3702/12/MD-4

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 283 நாள் 28.03.2012</u>**

கோயம்புத்தூர் மாநகராட்சியின் ஐந்து மண்டலங்களின் வார்டு குழு (மண்டல) தலைவர்களுக்கு அலுவலக பயன்பாட்டிற்கு ஐந்து எண்ணிக்கை வாக்கி டாக்கி வாங்கி வழங்க அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 10

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அடிப்படை கட்டமைப்பு போன்ற சிறப்பு வசதிகள் ஏற்படுத்துதல் - தமிழக அரசின் சிறப்பு திட்டம் Integrated Urban Development Mission (IUDM) 2011-2012 திட்டத்தின்கீழ் சாலை மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் மேற்கொள்ள பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டுதல் - தொடர்பு.

--------------

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களது கடித எண்.47923/2011/இ3 நாள் 01-02-2012-ல் கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் அடிப்படை கட்டமைப்பு போன்ற சிறப்பு வசதிகள் செய்ய தமிழக அரசின் சிறப்பு திட்டம் Integrated Urban Development Mission (IUDM) 2011-2012 திட்டத்தின்கீழ் மாநகராட்சிக்கு ரூ 2440 இலட்சம் ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

இதனைத் தொடர்ந்து புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் பேரூராட்சிகள், சாலைப் பணிகள், மழைநீர் வடிகால் மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் போன்ற பணிகளுக்கு விரிவான திட்ட அறிக்கை (DPR) தயாரித்து நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மாமன்றத் தீர்மானம் எண்.211 நாள் 29-12-2011-ல் மேற்காண் பணிகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது.

கோயம்புத்தூர் மாநகராட்சியில் புதியதாக இணைக்கப்பட்டுள்ள நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் சாலை மற்றும் மழைநீர் வடிகால் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 22-03-2012 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க மாமன்றத்திற்கு பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ரூபாய் இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1106/12/ எம்.டி.2 | வார்டு எண்.89 விசாலாட்சி நகர் பிரதான சாலை, காசிநாத் கார்டன் பகுதிகளில் தார்சாலை அமைத்தல் | 24.75 | 19-03-2012 இரண்டாம் அழைப்பு | திரு/ள் புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் கோயம்புத்தூர் 4.68% அதிகம் | திரு/ள் புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ், கோயம்புத்தூர் 4.64% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 2 | 1726/12/ எம்.டி.2 | வார்டு எண்.36 ராமசாமி நகர், சௌபாக்கிய நகர் பகுதிகளில் தார்சாலை அமைத்தல் | 12.20 | 19-03-2012 இரண்டாம் அழைப்பு | திரு/ள் புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் கோயம்புத்தூர் 5.54% அதிகம் | திரு/ள் புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ், கோயம்புத்தூர் 4.99% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 3 | 1795/12/ எம்.டி.2 | வார்டு எண்.1 ஈஸ்வர் பார்க் மெயின் சாலை – TNP நகர், சேரன் காலனி பகுதிகளில் தார்சாலை அமைத்தல் | 15.50 | 19-03-2012 இரண்டாம் அழைப்பு | திரு/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 6.15% அதிகம் | திரு/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.98% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 4 | 1604/12/ எம்.டி.2 | வார்டு எண்.30 எல்.ஜி.பி. நகர் மற்றம் கிருஷ்ணாபுரம் பகுதிகளில் தார்சாலை அமைத்தல் | 20.80 | 19-03-2012 இரண்டாம் அழைப்பு | திரு/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 7.11% அதிகம் | திரு/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.97% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 5 | 1791/12/ எம்.டி.2 | வார்டு எண்.7 பழனியம்மாள் மனைப்பிரிவு பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலைகளில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் (மேற்கு மண்டலம்) | 16.00 | 19-03-2012 இரண்டாம் அழைப்பு | திரு/ள் என்.பி.கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.93% அதிகம் | திரு/ள் என்.பி.கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.90% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 6 | 1793/12/ எம்.டி.2 | வார்டு எண்.1 சேரன் காலனி மற்றும் ஈஸ்வர் பூங்கா பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 18.50 | 19-03-2012 இரண்டாம் அழைப்பு | தி/ள் என்.பி.கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.94% அதிகம் | தி/ள் என்.பி.கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.92% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 7 | 1791/12/ எம்.டி.2 | வார்டு எண்.4 முல்லை நகர் மற்றும் சௌபாக்கிய கார்டன் பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் (வடக்கு மண்டலம்) | 17.40 | 19-03-2012 இரண்டாம் அழைப்பு | தி/ள் என்.பி.கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.94% அதிகம் | தி/ள் என்.பி.கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.92% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 8 | 1669/12/ எம்.டி.2 | வார்டு எண்.43 ஜீவா வீதி 1 முதல் 2 வரை மற்றும் அடப்புத் தோட்டம் பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 16.25 | 19-03-2012 இரண்டாம் அழைப்பு | தி/ள் என்.பி.கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.93% அதிகம் | தி/ள் என்.பி.கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.90% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 9 | 1799/12/ எம்.டி.2 | வார்டு எண்.5 சிவா நகர், நாகப்பா காலனி, தென்றல் நகர் பிரதான சாலைகளில் தார்சாலை அமைத்தல் | 12.00 | 20-03-2012 இரண்டாம் அழைப்பு | தி/ள் எஸ்.பி. பில்ட்ரஸ், கோயம்புத்தூர் 8.02% அதிகம் | தி/ள் எஸ்.பி. பில்ட்ரஸ், கோயம்புத்தூர் 4.98% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 10 | 1164/12/ எம்.டி.2 | வார்டு எண்.98 எம்.ஜி.ஆர் நகர் பிரதான மற்றும் குறுக்கு சாலைகளில் தார்சாலை அமைத்தல் | 16.00 | 20-03-2012 இரண்டாம் அழைப்பு | தி/ள் ஏ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்ன்ஸ், கோயம்புத்தூர் 4.92% அதிகம் | தி/ள் ஏ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்ன்ஸ், கோயம்புத்தூர் 4.87% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 11 | 1797/12/ எம்.டி.2 | வார்டு எண்.33 புதுக்காலனி பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 22.00 | 20-03-2012 இரண்டாம் அழைப்பு | திரு.கே. முருகேசன், கோயம்புத்தூர் 3.92% அதிகம் | திரு.கே. முருகேசன், கோயம்புத்தூர் 3.91% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 12 | 1168/12/ எம்.டி.2 | வார்டு எண்.98 எம்.ஜி.ஆர். நகர், உத்தமி நகர், லட்சுமணன் நகர் பகுதிகளில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல் | 19.50 | 20-03-2012 இரண்டாம் அழைப்பு | திரு.கே. முருகேசன், கோயம்புத்தூர் 3.87% அதிகம் | திரு.கே. முருகேசன், கோயம்புத்தூர் 3.85% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 13 | 1167/12/ எம்.டி.2 | வார்டு எண்.99 கோண-வாய்க்கால்பாளையம் மற்றும் கருப்பராயன் கோவில் வீதிகளில் மழைநீர் வடிகால் அமைத்தல் | 15.50 | 20-03-2012 இரண்டாம் அழைப்பு | திரு.கே. முருகேசன், கோயம்புத்தூர் 3.86% அதிகம் | திரு.கே. முருகேசன், கோயம்புத்தூர் 3.84% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 14 | 1093/12/ எம்.டி.2 | வார்டு எண்.95 சர்ச் வீதியில் வடக்கிலிருந்து அம்மன் நகர் வரை மழைநீர் வடிகால் கட்டுதல் | 47.50 | 21-03-2012 இரண்டாம் அழைப்பு | தி/ள் பி.செந்தில் அன் கோ, கோயம்புத்தூர் 4.98% அதிகம் | தி/ள் பி.செந்தில் அன் கோ, கோயம்புத்தூர் 4.97% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 15 | 1100/12/ எம்.டி.2 | வார்டு எண்.95 மற்றும் 96 காந்திஜி சாலையில் பொள்ளாச்சி பிரதானசாலையில் இருந்து ராஜவாய்க்கால் வரை மழைநீர் வடிகால் கட்டுதல் | 40.00 | 21-03-2012 இரண்டாம் அழைப்பு | தி/ள் பி.செந்தில் அன் கோ, கோயம்புத்தூர் 4.92% அதிகம் | தி/ள் பி.செந்தில் அன் கோ, கோயம்புத்தூர் 4.90% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 16 | 1094/12/ எம்.டி.2 | வார்டு எண்.94 அம்மன் நகர் மற்றும் கோகுலாபுரம் பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 45.00 | 21-03-2012 இரண்டாம் அழைப்பு | தி/ள் என்.பி.கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.94% அதிகம் | தி/ள் என்.பி.கே. அசோசியட்ஸ், கோயம்புத்தூர் 4.92% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 17 | 1185/12/ எம்.டி.2 | வார்டு எண்.88 அரசு அலுவலர்கள் காலனி பகுதியில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் கட்டுதல் | 27.00 | 21-03-2012 இரண்டாம் அழைப்பு | திரு.எஸ்.ராஜு கோயம்புத்தூர் 5.23% அதிகம் | திரு.எஸ்.ராஜு கோயம்புத்தூர் 4.99% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 18 | 1866/12/ எம்.டி.2 | வார்டு எண்.2 வி.சி.எஸ். நகர் மற்றும் மேட்டுப்பாளையம் சாலை பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டுதல் | 26.80 | 21-03-2012 இரண்டாம் அழைப்பு | திருமதி.கே. பங்கஜம் கோயம்புத்தூர் 4.93% அதிகம் | திருமதி.கே. பங்கஜம் கோயம்புத்தூர் 4.91% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 19 | 1865/12/ எம்.டி.2 | வார்டு எண்.2 வி.கே.எல்.நகர் மற்றும் வி.சி.எஸ்.நகர் பகுதிகளில் தார்சாலை அமைத்தல் | 27.00 | 22-03-2012 இரண்டாம் அழைப்பு | தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 7.44% அதிகம் | தி/ள் எம்.எஸ். இன்ஜினியர்ஸ், கோயம்புத்தூர் 4.91% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 20 | 1797/12/ எம்.டி.2 | வார்டு எண்.42 அம்மி மொசைக் சாலை மற்றும் சீனிவாசா நகர் பகுதியில் தார்சாலை அமைத்தல் | 29.50 | 22-03-2012 இரண்டாம் அழைப்பு | திரு.சி.கே.சுந்தரம் கோயம்புத்தூர் 4.91% அதிகம் | திரு.சி.கே.சுந்தரம் கோயம்புத்தூர் 4.17% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 21 | 1095/12/ எம்.டி.4 | வார்டு எண்.94 அம்மன் நகர் குறுக்கு சாலைகளில் தார்சாலை அமைத்தல் | 35.00 | 22-03-2012 இரண்டாம் அழைப்பு | தி/ள் பி.செந்தில் அன் கோ, கோயம்புத்தூர் 4.38% அதிகம் | தி/ள் பி.செந்தில் அன் கோ, கோயம்புத்தூர் 4.18% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |
| 22 | 1166/12/ எம்.டி.2 | வார்டு எண்.100 ஆடிட்டர் வீதி பியூன் காலனி பிரதான சாலை, முல்லை நகர் பகுதிகளில் தார்சாலை அமைத்தல், மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டுதல். | 48.30 | 22-03-2012 இரண்டாம் அழைப்பு | தி/ள் எ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்ன்ஸ், கோயம்புத்தூர் 4.97% அதிகம் | தி/ள் எ.பி.ஆர். கன்ஸ்ட்ரக்ன்ஸ், கோயம்புத்தூர் 4.49% அதிகம் (விலைக் குறைப்பிற்கு பின்) |

வரிசை எண். 1 முதல் 22 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட கால கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும் மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண் 1106/2012/எம்.டி.2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 284 நாள் 28.03.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 11

பொருள் - உதவித்தொகை – கோவை தெற்கு வட்டம் - கோவை வடக்கு வட்டத்தில் உதவித்தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் - வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளோர் பட்டியல் எண் வழங்குவது – தொடர்பாக.

--------------------

வட்டாட்சியர் சமூக பாதுகாப்புத் திட்டம், கோவை தெற்கு மற்றும் வடக்கு அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி, கோவை தெற்கு வட்டம் மற்றும் வடக்கு வட்டத்தில் உதவித்தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளோர் பட்டியலில் சேர்க்கும்படி பரிந்துரைத்த 1267 விண்ணப்பங்களும் மற்றும் முதலமைச்சர் தனிப்பிரிவிலிருந்து பெறப்பட்ட 7 விண்ணப்பங்களும் சேர்த்து மொத்தம் 1274 விண்ணப்பங்களை ஆய்வு செய்யப்பட்டதன் விபரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| பெறப்பட்ட விண்ணப்பங்கள் | - | 1274 |
| இவற்றுள் | - | |
| இரண்டு முறை பதியப்பட்டது | - | 544 |
| தகுதியுடையவர்கள் | - | 249 |
| தகுதியற்றவர்கள் | - | 37 |
| தவறான முகவரி | - | 90 |
| குடிபெயர்ந்தவர்கள் | - | 55 |
| இறந்தவர்கள் | - | 17 |
| உதவித் தொகை பெறுபவர்கள் | - | 19 |
| கதவு அடைப்பு | - | 34 |
| மாநகராட்சி எல்லைக்கு அப்பாற்பட்டவர்கள் | - | 54 |
| ஏற்கனவே ஆய்வு செய்யப்பட்டது | - | 142 |
| BPL பட்டியலில் எண் உள்ளவர்கள் | - | 33 |
| மொத்தம் | - | 1274 |

எனவே, மேற்படி தகுதிடைய 249 விண்ணப்பதாரர்களின் பெயர்களை வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள பட்டியலில் சேர்க்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 11647/2012/எம்.இ. 6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 285 நாள் 28.03.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 12

**பொருள்-** கோயம்புத்தூர் மாநகராட்சி – கிழக்கு மண்டலம் - வருடாந்திர குத்தகை இனங்கள் 01.04.2012 முதல் 31.03.2015-ம் ஆண்டு வரை ஒப்பந்தப் புள்ளி பெறப்பட்டது – ஒப்படைப்பு செய்தல் - தொடர்பாக.

**பார்வை–** வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 94 நாள் 27/03/2012

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட உப்பிலிபாளையம் ஆடு அறுவைமனை குத்தகை வசூலிக்கும் உரிமம் இனத்திற்கு 2012முதல் 2015-ம் ஆண்டிற்கு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 14.03.2012-ம் தேதி நடைபெற்றதில் கீழக்காணுமாறு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் பெயர் | நிர்ணயம் செய்யப்பட்ட வருடாந்திர அரசு உரிமத் தொகை | வருடாந்திர உரிமக்கட்டணம் உச்ச கேள்வி | | உயர்ந்த பட்ச ஏலத் தொகை |
|---|---|---|---|---|---|
| | | | மின் ஏலத் தொகை | ஒப்பந்தப்புள்ளி தொகை | |
| 1. | திரு.பி.குமரேசன் | 1,61,000/- | 1,83,200/- | 1,85,903/- | - |
| 2. | திரு.எஸ்.எம்.செந்தில்குமார் | 1,61,000/- | - | 1,90,809/- | 1,90,809/- |

மேற்படி இனத்திற்கு அரசு நிர்ணயிக்கப்பட்ட வருடாந்திர உரிமத் தொகை ரூ.1,61,000/-யை விட அதிகமாக ஒப்பந்தப்புள்ளி ரூ.1,90,809/-க்கு திரு.எஸ்.எம்.செந்தில்குமார் என்பவர் கோரியுள்ளார். எனவே, உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை கோரியுள்ள ஏலதாரர் திரு.எஸ்.எம்.செந்தில்குமார் என்பவருக்கு மேற்காணும் குத்தகை இனத்தை ஒப்படைப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 94 நாள் 27.03.2012ன்படி மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** அனுமதிக்கலாம் ந.க.எண்.00864/12/கிஅ11

**மாநகர மன்ற தீர்மானம் எண் 286 நாள் 28.03.2012**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 13

**பார்வை:** வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 98 நாள் 27/03/2012

–––

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்கு உட்பட்ட கீழ் காணும் குத்தகை இனத்திற்கு 14.03.2012 அன்று நடைபெற்ற மின் ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளியில் கீழ்குறிப்பிட்டுள்ளவாறு உயர்ந்த பட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்ட விபரங்கள்.

| வ. எண் | குத்தகை இனத்தின் பெயர் | அரசாங்க மதிப்பீட்டுத் தொகை வருடத்திற்கு ரூ. | ஏலதாரர் பெயர் | ஏலதாரர் அளித்துள்ள உயர்ந்தபட்ச ஏலத்தொகை ரூ. | மின் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | காந்திபுரம் மத்திய பேருந்து நிலையம் நான்கு தளங்களில் உள்ள அறைகளில் பயணிகள் இரவு தங்கும் விடுதி (தளம் எண்.1 முதல் மாடியில் அறை எண். 4ஐத் தவிர) | **18,25,000/-** | திரு. T.ரங்கநாதன்<br>திரு.கே.ஆர்.ராஜா<br>திரு.M. ஹரிகிருஷ்ணன் | 11,00,000/-<br>21,21,212/-<br>**22,25,000/-** | ஒப்பந்தப்புள்ளி<br>ஒப்பந்தப்புள்ளி<br>ஒப்பந்தப்புள்ளி |

மேற்படி குத்தகை இனத்திற்கு பெறப்பட்ட உயர்ந்தபட்ச ஏல தொகை அரசாங்க மதிப்பை விட கூடுதலாக உள்ளது. எனவே மேற்படி குத்தகை இனத்தை உயர்ந்தபட்ச ஏல தொகை கோரிய ஏலதாரர்களுக்கு மத்திய கலால் துறைக்கு செலுத்த வேண்டிய சேவை வரி மற்றம் வருமான வரி செலுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்படைச் செய்வது குறித்து முடிவு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 98 நாள் 27.03.2012ன்படி, இவ்வினத்திற்கு நடைபெற்ற முதலாவது பொது ஏலத்தில் பெறப்பட்டுள்ள ஏலக்கோரிக்கைத் தொகையான ரூ.22,25,000/-க்கும் கூடுதலாக ஏலக்கோரிக்கை வருவதற்கான வாய்ப்புகள் உள்ளதால் மறுஏலம் கோர மாமன்றத்தில் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண். 9659/2009/அ1(ம)

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 287 நாள் 28.03.2012</u>**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தை ஏற்று மறுஏலம் கோர தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 14

**பார்வை:** வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 97 நாள் 27/03/2012

கோவை மாநகராட்சி வடக்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனஙகளை 2012—2015ம் வரையிலான மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் ஒப்படை செய்வதற்கு பொது மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 14.03.12 மற்றும் 21.03.12 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டது. இதில் கீழ் குறிப்பிட்டுள்ள இனத்திற்கு மட்டும் அரசு மதிப்பினைக்காட்டிலும் கூடுதலாக ஏலக் கோரிக்கை பெறப்பட்டுள்ளது.

| இனம் | ஏலதாரர் பெயர் | உயர்ந்த பட்ச ஏல கோரிக்கை | அரசு மதிப்பு | மின் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|---|
| துடியலுார் இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம் | 1.சி.ரெங்கராஜ்<br>2.சி.கந்தசாமி<br>3.எஸ்.ரமேஸ்<br>4.எம்.எகலில்ரகுமான்<br>5.எ.கோவிந்தராஜ்<br>**6.கே. தீபன்** | 2,55,000/—<br>2,56,000/—<br>2,15,000/—<br>2,65,000/—<br>2,52,000/—<br>**2,66,666/—** | 2,25,000/— | 21.03.12ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி |

மேற்படி ஏலதார்களில் திரு.கே.தீபன் என்பவர் உயர்ந்தபட்சமாக ரூ. 2,66,666/—க்கு ஏலக் கோரிக்கை அளித்துள்ளார்.

மேற்படி இனம் சென்ற ஆண்டு (2011—2012) ரூ. 1,91,520/—க்கு ஏலம் விடப்பட்டிருந்தது. எனவே சென்ற ஆண்டுத்தொகை மற்றும் அரசுமதிப்பினைக்காட்டிலும் கூடுதலாக கோரப்பட்டுள்ள மேற்படி ஏலதாரரின் ஏலக்கோரிக்கையினை ஏற்று உரிமம் ஒப்படை செய்வதற்கு வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 97 நாள் 27.03.2012ன்படி மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—ஒப்புதல் அளிக்கலாம் ந.க.எண்.903/2012/அ1

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 288 நாள் 28.03.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் அளித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 15

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் 2012-15-க்கான குத்தகை உரிம இனங்கள் - பொது மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 14.03.2012 மற்றும் 21.03.2012-ல் நடைபெற்றது - ஏலக்கேள்வி / ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – உயர்ந்தபட்ச ஏலதாரர்களுக்கு ஒப்படைக்க அனுமதி கோருவது - தொடர்பாக.

**பார்வை:** வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 95 நாள் 27/03/2012

-----------

**அ. ஏல தேதி – 14.03.2012**

| வ எண். | குத்தகை இனங்கள் | நிர்ணயம் செய்யப்பட்ட தொகை | ஏலதாரர் பெயர் | உயர்ந்தபட்ச மின் ஏலக் கேள்வித் தொகை | ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | வடவள்ளி தினசரி சந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,07,200/- | 1. K.சண்முகசரவணன்<br>2. U.K.தங்கவேலு | -<br>- | 1,13,000/-<br>1,10,000/- |
| 2. | வடவள்ளி வாரச்சந்தை கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 1,58,700/- | 1. S.சரவணமூர்த்தி<br>2. K.யுவராஜ் | -<br>- | 1,35,000/-<br>1,59,000/- |
| 3. | ஆடு அறுக்கும் தொட்டி (மாதந்திர வாடகை அடிப்படையில்)-கவுண்டம்பாளையம் | 41,140/- | 1. K.சண்முகசரவணன்<br>2. U.K.தங்கவேலு | 42,000/-<br>- | 43,200/-<br>42,000/- |

கோயம்புத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் குத்தகை இனங்கள் 2012-2015 மூன்றாண்டுகளுக்கு ஒப்படைக்க பொது/மறு மின் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி 14.03.2012 மற்றும் 21-03-2012 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. அதில் கீழ்கண்ட இனங்களுக்கு உயர்ந்தபட்ச ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி தொகை பெறப்பட்ட விபரங்கள்.

**ஆ. மறு ஏல தேதி – 21.03.2012**

| வ எண். | குத்தகை இனங்கள் | நிர்ணயம் செய்யப்பட்ட தொகை | ஏலதாரர் பெயர் | உயர்ந்தபட்ச மின் ஏலக் கேள்வித் தொகை | உயர்ந்தபட்ச ஒப்பந்தப் புள்ளி தொகை |
|---|---|---|---|---|---|
| 1. | நவீனக் கழிப்பிடம் (வடவள்ளி பஸ்நிலையம் அருகில்) | 18,200/- | 1. M.அம்மாசை<br>2. U.K.தங்கவேலு | -<br>- | **ரூ.74,500**<br>ரூ.65,200 |
| 2. | காந்திபார்க் உடற்பயிற்சி சாலை (மூன்றாண்டு காலத்திற்கு மாத வாடகை அடிப்படையில்) | 1,250/- | 1.A.முரளிதரன்<br>2.O.A.சையது இப்ராஹீம்<br>3.SP.S.சுப்ரமணியன் | - | **ரூ.3,050**<br>-<br>ரூ.3,000 |

**அ.** வரிசை எண்.**1முதல் 3வரை** குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள மதிப்பினை விட அதிகமாக ஏலம் கோரிய திரு. K.சண்முகசரவணன், K.யுவராஜ் மற்றும் K.சண்முகசரவணன் ஆகியவர்களுக்கு ஒப்படைப்பு செய்யவும்

**ஆ.** வரிசை எண். **1 மற்றும் 2-ல்** குறிப்பிட்டுள்ள இனங்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள மதிப்பினை விட அதிகமாக ஏலம் கோரிய திரு.எம்.அம்மாசை மற்றும் திரு. A.முரளிதரன் ஆகியவர்களுக்கு ஒப்படைப்பு செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 95 நாள் 27.03.2012ன்படி மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அ மற்றும் ஆ அனுமதிக்கலாம் ந.க.எண்.497/2012/அ1(மே)

---

**மாநகர மன்ற தீர்மானம் எண் 289 நாள் 28.03.2012**

பொருளின் அ மற்றும் ஆ வை அனுமதிக்கலாம் என்ற அலுவலகக் குறிப்பை ஏற்று கொண்டு தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 16

**பொருள்:** கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் – சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் கடை எண் 19,20,21 அருகில் உள்ள 10’X 16’ அளவுள்ள காலியிடத்தை நவீன மீன் விற்பனை நிலையம் அமைக்க ஒதுக்கீடு செய்ய வேண்டி– தொடர்பாக.

**பார்வை:** 1. தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகம் துணை மேலாளர் அவர்களின் 17.03.2012 தேதியிட்ட கடிதம் ந.க.எண். 4/2010.
2. ஆணையர் அவர்களின் உத்திரவு நாள். 20.03.2012.
3. வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 100 நாள் 27/03/2012

------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டல கட்டுப்பாட்டில் உள்ள சுந்தராபுரம் தக்காளி மார்கெட் கடை எண் 19,20,21 அருகில் உள்ள 10’X 16’ அளவுள்ள காலியிடத்தினை மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கான ஏல விளம்பரம் தினத்தந்தி செய்தித்தாளில் 17.03.2012 அன்று வெளியிடப்பட்டது.

மேற்படி, இடத்தை பார்வை 1ல் கண்ட கடிதத்தில் தமிழ்நாடு அரசு நிறுவனமாகிய தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்திற்கு “ நவீன மீன் விற்பனை நிலையம் அமைத்துக்கொள்ள குத்தகை அடிப்படையில் பொதுப்பணித்துறை வழிகாட்டுதலின்படி மாநகராட்சி நிர்ணயிக்கும் வருட குத்தகையினை செலுத்த தயாராக உள்ளதாக தெரிவித்துள்ளனர்.

பார்வை 2ல் காணும் ஆணையரின் உத்திரவின்படி மேற்படி இடத்தை பொதுப்பணித்துறை வழிகாட்டுதலின்படி மாநகராட்சி நிர்ணயிக்கும் மாதாந்திர வாடகை அடிப்படையில் தமிழ்நாடு மீன் வளர்ச்சித்துறைக்கு ஒதுக்கீடு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டது. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 100 நாள் 27.03.2012ன்படி மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு–அனுமதிக்கலாம் ந.க.எண். 2482/2012/பி6 (தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 290 நாள் 28.03.2012**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 17

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.25-ல் மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமார்கெட் அருகில் தரை தளத்தில் மற்றும் முதல் தளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கடைகளை மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்வது - தொடர்பாக.

**பார்வை:** வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 99 நாள் 27/03/2012

**********

கோயம்புத்தூர் மாநகராட்சி மத்திய மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.25-ல் மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமார்கெட் அருகில் தரை தளத்தில் மூன்று கடைகள் மற்றும் முதல் தளத்தில் மூன்று கடைகள் புதியதாக கட்டப்பட்டுள்ளது.

மேற்படி கடைகளை மின் ஏலம் மற்றும் ஒப்பநதபுள்ளிகள் மூலம் ஒதுக்கீடு செய்ய ஏலம் கோரப்படவேண்டும். பொதுப் பணிதுறை வாடகை மதிப்பின் படி வாடகை நிர்ணயம் செய்திட பொறியாளரின் அறிக்கை கோரப்பட்டு கீழ்கண்டவாறு பொதுப்பணித்துறை வாடகை மதிப்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | வணிக வளாகம் அமைந்துள்ள இடம் | கடை எண் | கடை ஒன்றிக்கு மொத்த சதுரடி | ஒரு சதுரடிக்கு நிர்ணயம் செய்யப்பட்ட தொகை ரூ | மாத வாடகை ரூ |
|---|---|---|---|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் சாலையில் உள்ள பூமார்க்கெட் அருகில் தரை தளத்தில் மூன்று கடைகள் | 1 | 166 | 55.57 | 9,225/- |
| | | 2 | 160 | 55.57 | 8,891/- |
| | | 3 | 153 | 55.57 | 8,502/- |
| | முதல் தளத்தில் மூன்று கடைகள் | 1 | 173 | 55.57 | 9,614/- |
| | | 2 | 160 | 55.57 | 8,891/- |
| | | 3 | 153 | 55.57 | 8,502/- |

மின் ஏலம் மூலம் ஒதுக்கீடு செய்ய கீழ்கண்டவாறு காப்புத் தொகை, வைப்புத்தொகை,சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் மற்றும் சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லாமல் அதற்கு செலுத்த வேண்டிய தொகை நிர்ணயம் செய்யவும் அதற்கான விளம்பர செலவினங்களை ஏற்கவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டது.

| | |
|---|---|
| வைப்புத்தொகை | - ரூ.25,000/- |
| காப்புத்தொகை | - ரூ.25,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழ் அல்லது வங்கி உறுதி சான்றிதழ் | - ரூ.1,50,000/- |
| சொத்து மதிப்பீடு சான்றிதழுக்கு பதிலாக செலுத்த வேண்டிய தொகை | - ரூ.50,000/- |

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 99 நாள் 27.03.2012ன்படி மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு: ஒப்புதல் அளிக்கலாம். ந.க.எண். 3128/2012/அ1(ம)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 291 நாள் 28.03.2012**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழங்கி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 18

பொருள்:– கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் – வருடாந்திர குத்தகை இனஙகள் 01.04.2012 முதல் 31.03.2015ம் ஆண்டு வரை மூன்று (3) ஆண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டது – ஒப்படைப்பு செய்தல் – தொடர்பாக.

பார்வை: வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 96 நாள் 27/03/2012

******

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குத்தகை இனஙகளுக்கு மின் ஏலம் / ஒப்பந்தப்புள்ளி 14.03.2012 மற்றும் 21.03.2012 ஆகிய நாட்களில் நடைபெற்றது. இதில் கீழ்கண்ட குத்தகை இனஙகளுக்கு அதன் எதிரே கண்டவாறு உயர்ந்தபட்ச குத்தகை தொகை கோரப்பட்டது.

| வ. எண். | குத்தகை இனத்தின் பெயர் | ஏலதாரர் பெயர் | அரசாங்க மதிப்பு (வருடத்திற்கு) (ரூபாய்) | உயர்ந்தபட்ச தொகை (ரூபாய்) |
|---|---|---|---|---|
| | **ஏலம் (14.03.2012) :** | | | |
| 1 | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் குளிர்பதனக் கடை | பி.கார்த்திக் | **56,000** | 68,112 |
| | | **எஸ். மணிகண்டன்** | | **94,788** |
| | | எ.சந்திரன் | | – |
| | **மறு ஏலம் (21.03.2012) :** | | | |
| 2 | தினசரி சுஙக வசூல் – குனியமுத்தூர் (வாகனஙகளுக்கு) | எஸ். ரமேஷ் | **1,04,100** | 1,51,109 |
| | | **எஸ். ஷகீலாபேஹம்** | | **2,01,000** |
| | | கே. சண்முகசரவணன் | | – |
| | | எல். என். சையது இப்ராஹிம் | | – |
| | | கே. சிவசக்தி | | 1,15,600 |
| | | எம். சுபாஸ்சந்திரபோஸ் | | 1,45,000 |
| 3 | வார்டு 93 – சின்ன சுடுகாடு ஆண்/பெண் கழிப்பிடம் | எம். தனலட்சுமி | **73,000** | 91,000 |
| | | **எம். சோமசுந்தரம்** | | **95,000** |
| | | பி. முருகன் | | 92,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | வார்டு 88 – தால் பேக்டரி வீதி ஆண்/பெண் கழிப்பிடம் | பி. முருகன் | 1,12,000 | 1,32,200 |
| | | கே. சிவசக்தி | | 82,000 |
| | | **என். முத்துசாமி** | | **1,65,000** |
| | | எல்.என். சையது இப்ராஹிம் | | – |
| 5 | வார்டு 88 – சுண்டக்காமுத்துர் மெயின்ரோடு ஆண்/பெண் கழிப்பிடம் | **கு.வெ. முனுசாமி** | 34,800 | **68,000** |
| | | ஆர். ராஜேஸ் | | 55,000 |
| 6 | சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் ஏலமேடை | **கே. சண்முகசரவணன்** | 7,76,000 | **8,52,200** |
| | | டி.எஸ். அம்பிராஜ் | | 7,77,776 |
| | | வள்ளியம்மாள் பழனிச்சாமி | | 8,51,000 |
| | | ஏ. ஜோதிமணி | | 8,00,103 |
| | | கே.ஆர். பழனிசாமி | | 8,45,000 |
| | | கே.பி.தமிழரசன் | | 8,44,000 |
| | | ஆர். கிருஷ்ணமூர்த்தி | | 7,70,000 |
| | | எல்.என். சையது இப்ராஹிம் | | – |

மேற்கண்ட 6 இனஙகளில் வரிசை எண்.1 ல் திரு. எஸ். மணிகண்டன் என்பவரும், வரிசை எண்.2ல் திருமதி. எஸ். ஷகீலாபேஹம் என்பரும், வரிசை எண்.3ல் திரு. எம். சோமசுந்தரம் என்பவரும், வரிசை எண்.4ல் திரு. என். முத்துசாமி என்பவரும், வரிசை எண்.5ல் திரு. கு.வெ. முனுசாமி என்பரும் மற்றும் வரிசை எண்.6ல் கே. சண்முகசரவணன் என்பரும் அரசாஙக மதிப்பைக் காட்டிலும் கூடுதலாக உயர்ந்தபட்ச தொகைக்கு ஏலம் கோரியதால் இவர்களுக்கு ஏலம் ஒப்படைப்பு செய்வது குறித்து வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 96 நாள் 27.03.2012ன்படி, வரிசை எண் 1முதல் 5 வரையுள்ள இனஙகளுக்கு ஏலக்கோரிக்கைகளை ஏற்று ஒப்படைச் செய்ய மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது. வரிசை எண் 6ல் உள்ள இனத்திற்கு பொது ஏலத்தில் பெறப்பட்டுள்ள ஏலக்கோரிக்கைத் தொகையான ரூ7,76,000/- கூடுதலாக ஏலக்கோரிக்கை வருவதற்கான வாய்ப்புகள் உள்ளதால் மறுஏலம் கோர மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

**அலுவலகக்குறிப்பு** – அனுமதிக்கலாம். ந.க.எண். 698/2012/பி6

**மாநகர மன்ற தீர்மானம் எண் 292 நாள் 28.03.2012**

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானத்தை ஏற்று மறுஏலம் கோர தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 19

**பொருள்** குத்தகை – கோயம்புத்தூர் மாநகராட்சி –தெற்கு மண்டலம் –குறிச்சி சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட் பகுதியில் உள்ள வணிக வளாக கடைகள் – குத்தகை இனஙகள் – 2012–2013 ம் ஆண்டிற்கு சம்மத கடிதம் வழஙகிய குத்தகைதாரர்களுக்கு 5 % உயர்வு செய்து –உரிமம் புதுப்பித்தல் –தொடர்பாக

**பார்வை**
1. அரசாணை நிலை எண் 78 ந.நி.(ம) கு.வ. (மா.ந2) துறை நாள். 25.05.2009.
2. வரிவதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 101 நாள் 27/03/2012

************

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட குறிச்சி பகுதியிலுள்ள கீழே விவரித்துள்ள வரியில்லா இனஙகளின் குத்தகை காலம் 31.03.2012 உடன் முடிவடைகிறது.

அ) குறிச்சி வார்டு எண் 97 லிலுள்ள சுந்தராபுரம் தக்காளி மார்க்கெட்டில் உள்ள வணிக வளாக கடைகளில் கடை எண்கள். (1,2,4,5,6,10,11,13,14,18,23,26,30,32,33,34) ஆகிய 19 கடைகள் அரசாணை எண் 92/03.07.2007 ன்படி கடந்த 2009 –10 முதல் 2011–12 ஆகிய 3 வருடஙகளுக்கு புதுப்பிக்கப்பட்டன. அதே போன்று 2012–13 முதல் 2014–15 ஆகிய 3 வருடஙகளுக்கு அதே குத்தகைதாரா்களுக்கு அரசாணை எண் 92/03.07.2007 ன் படி 2011–12 ம் ஆண்டின் குத்தகை தொகையை 15% உயர்வு செய்து புதுப்பித்தல் கட்டணம் ரூ.1000/– வசூலித்தும் ஒரு வருட முன்வைப்பு தொகை பிடித்தம் செய்தும் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய மூன்று ஆண்டுகளுக்கு உரிமம் நீட்டிப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்காக விபரம் பின்வருமாறு.

| வ. எண் | கடை அளவு (ச.அடி) | புதுப்பிக்கப்பட வேண்டிய கடை எண்கள் | உரிமதாரா் பெயர் | புதுப்பித்தல் கட்டணம் | 2011–2012 ம் ஆண்டு குத்தகை தொகை ரூ | ஒரு வருட முன் வைப்புத் தொகை ரூ. (15 % உயர்வு) | 2012–2013 ம் ஆண்டு செலுத்த வேண்டிய குத்தகை தொகை ரூ. | 2013–2014 ம் ஆண்டு செலுத்த வேண்டிய குத்தகை தொகை ரூ. | 2014–2015 ம் ஆண்டு செலுத்த வேண்டிய குத்தகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 110 | எண்.1 | திரு.ஞானதா்மன் | 1000 | 19,872 | 22853 | 22853 | 22853 | 22853 |
| 2 | 110 | எண்.2 | திரு.ஞானதா்மன் | 1000 | 19,872 | 22853 | 22853 | 22853 | 22853 |
| 3 | 110 | எண்.4 | திரு.ஜேம்ஸ் வில்லியம்ஸ் | 1000 | 14,904 | 17140 | 17140 | 17140 | 17140 |
| 4 | 110 | எண்.5 | திரு.ராஜசேகர் | 1000 | 12,420 | 14283 | 14283 | 14283 | 14283 |
| 5 | 110 | எண்.6 | திரு.லெனின்ராஜ் | 1000 | 11,592 | 13331 | 13331 | 13331 | 13331 |
| 6 | 110 | எண்.10 | திரு.பாலு | 1000 | 13,662 | 15711 | 15711 | 15711 | 15711 |
| 7 | 85 | எண்.11 | திரு.மயில்சாமி | 1000 | 9,936 | 11426 | 11426 | 11426 | 11426 |
| 8 | 85 | எண்.13 | திரு.கந்தசாமி | 1000 | 9,936 | 11426 | 11426 | 11426 | 11426 |
| 9 | 85 | எண்.14 | திரு.தனபால் | 1000 | 6,210 | 7142 | 7142 | 7142 | 7142 |
| 10 | 85 | எண்.15 | திரு.சிதம்பரம் | 1000 | 8,942 | 10253 | 10253 | 10253 | 10253 |
| 11 | 85 | எண்.16 | திரு.ஆர்.சுப்ரமணியம் | 1000 | 9,936 | 11426 | 11426 | 11426 | 11426 |
| 12 | 85 | எண்.17 | திரு.ஆர்.சுப்ரமணியம் | 1000 | 9,936 | 11426 | 11426 | 11426 | 11426 |
| 13 | 40 | எண்.18 | திரு.ராதாகிருஷ்ணன் | 1000 | 8,280 | 9522 | 9522 | 9522 | 9522 |
| 14 | 110 | எண்.23 | திரு.மயில்சாமி | 1000 | 10,764 | 12379 | 12379 | 12379 | 12379 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 110 | எண்.26 | திரு.அசோக்குமார் | 1000 | 12,254 | 14092 | 14092 | 14092 | 14092 |
| 16 | 275 | எண்.30 | திரு.எஸ்.பி.பாலமுருகன் | 1000 | 6210 | 7142 | 7142 | 7142 | 7142 |
| 17 | 275 | எண்.32 | திரு.ராமச்சந்திரன் | 1000 | 10764 | 12379 | 12379 | 12379 | 12379 |
| 18 | 275 | எண்.33 | கமலம் மகளீர் சுயஉதவிக்குழு | 1000 | 10074 | 11585 | 11585 | 11585 | 11585 |
| 19 | 275 | எண்.34 | திரு.சுப்புலிங்கம் | 1000 | 8280 | 9522 | 9522 | 9522 | 9522 |

ஆ) வார்டு 97 ல் உள்ள சுந்தராபுரம் தக்காளி மாக்கெட் கடை எண்கள் 3,7,8,9,12,19,20,21,22,24,25,28,29,31 ஆகிய 14 கடைகளும் கடந்த 2009 ல் அரசாணை எண 181 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை நாள். 19.09.2008 ல் மேலே குறிப்பிடப்பட்டுள்ள குத்தகை இனஙகளுக்கு ஏலத்தில் விடப்பட்டன. தற்போது இந்த குத்தகை இனஙகளுக்கான உரிமம் 31.03.2012 உடன் முடிவடைகிறது. கடந்த ஆண்டுகளின் குத்தகை தொகையை எவ்வித நிலுவையுமின்றி கட்டியுள்ளார்கள்.

எனவே, மேற்கண்ட குத்தகை இனஙகள் 01.04.2012 முதல் 31.03.2015 முடிய மூன்று ஆண்டுகளுக்கு முந்தைய 2011–12ம் ஆண்டின் குத்தகையிலிருந்து 5% உயர்வு செய்து 2012–13 ம் ஆண்டுக்கான குத்தகை தொகையாகவும், 2012–13 ம் ஆண்டின் குத்தகைத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து 2013–14ம் ஆண்டுக்கான குத்தகை தொகையாகும். 2013–14ம் ஆண்டின் குத்தகைத்தொகையில் 5 சதவீதம் உயர்வு செய்து 2014–15 ம் ஆண்டுக்கான குத்தகை தொகையாகவும், நிர்ணயம் செய்யவும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் அனுமதிக்காக விபரம் பின்வருமாறு,

| வ. எண் | கடை அளவு (ச.அடி) | உரிம இனங்கள் (ஏலத்தில் விடப்பட்டவை) 2009 முதல் 2012 வரை | உரிமதாரர் பெயர் | டேவணித் தொகை ரூ | 2011–2012 ம் ஆண்டு குத்தகை தொகை ( ரூ) | 2012–2013 ம் ஆண்டு செலுத்த வேண்டிய குத்தகை தொகை 5 % உயர்வு (ரூ). | 2013–2014 ம் ஆண்டு செலுத்த வேண்டிய குத்தகை தொகை 5 % உயர்வு ( ரூ). | 2014–2015 ம் ஆண்டு செலுத்த வேண்டிய குத்தகை தொகை ரூ. 5 % உயர்வு |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 110 | எண்.3 | திரு.ஆனந்த் | 10000/6464/ 6.03.2009 | 25137 | 26394 | 27714 | 29100 |
| 2 | 110 | எண்.7 | திரு.பாலமுரளி கிருஷ்ணன் | 10000/6465/ 6.03.2009 | 27122 | 28478 | 29902 | 31397 |
| 3 | 110 | எண்.8 | திருமதி.யசோதா | 10000/6466 /06.03.2009 | 15876 | 16670 | 17504 | 18379 |
| 4 | 110 | எண்.9 | திருமதி.சாந்தாமணி | 10000/6467/ 06.03.2009 | 15215 | 15976 | 16775 | 17614 |
| 5 | 85 | எண்.12 | திரு.பிரகாஷ் | 10000/6468/ 06.03.2009 | 20639 | 21671 | 22755 | 23893 |
| 6 | 40 | எண்.19 | திரு.சிதம்பரம் | 10000/5849/ 18.02.2009 | 9791 | 10281 | 10795 | 11335 |
| 7 | 40 | எண்.20 | திரு.சிதம்பரம் | 10000/5850/ 18.02.2009 | 8203 | 8614 | 9045 | 9497 |
| 8 | 40 | எண்.21 | திருமதி.லதா | 10000/5851/ 18.02.2009 | 9658 | 10141 | 10648 | 11180 |
| 9 | 40 | எண்.22 | திரு.பி.பால்ராஜ் | 10000/6469/ 06.03.2009 | 18919 | 19865 | 20858 | 21901 |
| 10 | 110 | எண்.24 | திரு.கே.ராஜகோபால் | 20000/6470/ 06.03.2009 | 11511 | 12087 | 12691 | 13326 |
| 11 | 110 | எண்.25 | திரு.ராஜசேகரன் | 20000/6471/ 06.03.2009 | 11643 | 12226 | 12837 | 13479 |
| 12 | 110 | எண்.28 | திரு.உதயகுமார் | 20000/6472/ 06.03.2009 | 16869 | 17713 | 18599 | 19529 |

**2012–13** ம் ஆண்டின் குத்தகை மற்றும் வாடகை இனஙகளுக்கான குத்தகைதாரர்களிடமிருந்து மொத்த ஏலத்தொகையில் **12** சதவீதம் சேவை வரியாக பிடித்தம் செய்யப்படும். பொருள் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மானம் எண் 101 நாள் 27.03.2012ன்படி, அரசு ஆணையின்படி, ஏலம் நடத்தி **9** ஆண்டுகளுக்கு மேல் ஆன கடைகளுக்கு வெளி மார்க்கெட் மதிப்பு அல்லது தற்போதைய வாடகை மதிப்பில் **15** சதவீதம் உயர்வு, இவ்விரண்டில் எது அதிகமோ அக்கட்டணத்தை வாடகையாக நிர்ணயம் செய்ய மாமன்றத்திற்குப் பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டது.

அலுவலக குறிப்பு – அனுமதிக்கலாம். ந.க.எண். **210/2012/பி6**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 293 நாள் 28.03.2012</u>**

வரி விதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண் 101 நாள் 27.03.2012ன் படியும், அரசு ஆணையின்படியும் ஏலம் நடத்தி ஒன்பது ஆண்டுகளுக்கு மேலான கடைகளுக்கு வெளி மார்க்கெட் மதிப்பு அல்லது தற்போதைய வாடகை மதிப்பில் 15 சதவிகிதம் உயர்வு இவ்விரண்டில் எது அதிகமோ அக்கட்டணத்தை வாடகையாக நிர்ணயம் செய்து கொள்ள அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 20

கடலூா் மாவட்டம் ''தானே புயல்'' பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு கோயம்புத்தூா் மாநகராட்சியிலிருந்து 10 எண்ணிக்கை தற்காலிக கழிப்பிடங்களை 15 நாட்களுக்கு வாடகை அடிப்படையில் 24-01-2012 அன்று அனுப்பப்பட்டது. அதற்கான, மொத்த வாடகை தொகையாக ரூ. 5,23,600/- கீழ்கண்ட இனங்களுக்கு கோரப்பட்டிருந்தது.

| | |
|---|---|
| டெபாஸிட் கட்டணம் | - 50,000/- |
| தினசரி வாடகை கட்டணம் | - 1,27,500/- |
| கிரேன் கட்டணம் | - 85,200/- |
| லாரி போக்குவரத்து கட்டணம் | - 2,00,000/- |
| கழிப்பறை சுத்தம் செய்யும் கட்டணம் | - 7,500/- |

அதில், பிளம்பிங், மேற்பார்வை, மற்றும் பராமரிப்பு பணிகளுக்கான வாடகை கட்டணமான ரூ.53,400/. பதிலாக ரூ. 52,900/- (டி.டி. எண் 663012 நாள் 15-02-2012) மட்டுமே தற்போது விடுவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், போக்குவரத்து, சுத்தம் செய்தல், கிரேன் வசதிகள் மின் வாரியத்தால் மேற்கொள்ளப்பட்டதாலும் மற்றும் டெபாஸிட் தொகையை பேரிடா் நிவாரண அடிப்படையிலும் செலுத்தபடாமல் உள்ளது.

மேலும், ''தானே புயலால்'' கடலூா் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள இழப்புகளை கருத்தில் கொண்டு பேரிடா் நிவாரண அடிப்படையில் **வாடகைத் தொகையில் (ரூ. 1,27,500/-க்கு) விலக்கு அளிக்குமாறும் அல்லது ஒரு குறிப்பிட்ட தொகை மட்டும்** கோருமாறு, கடலூா் மாவட்ட ஆட்சியா் அவா்களின் கடித எண் டி1/289/12 நாள் 15-02-2012-ல் கேட்டுக்கொண்டுள்ளாா்.

எனவே, கடலூா் மாவட்ட ஆட்சியரின் வாடகைத்தொகையில் விலக்கு அளிக்குமாறு கோரியுள்ள கோரிக்கையை ஏற்பது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

அலுவலகக் குறிப்பு - மாமன்றத்தின் முடிவிற்கு. ந.க.எண் 7512 /10/MD-4

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 294 நாள் 28.03.2012</u>**

பொருளில் குறிப்பிட்டுள்ள ''தானே'' புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள 10 எண்ணிக்கை தற்காலிக கழிப்பிடங்களுக்கான வாடகைத் தொகையில், விலக்கு அளிக்கக் கோரும் கடலூா் மாவட்ட ஆட்சியரின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 21

பொருள் :- உதவித் தொகை - கோவை தெற்கு வட்டம் மற்றும் கோவை வடக்கு வட்டத்தில் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள் - வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளோா் பட்டியல் எண் வழங்குவது - தொடா்பாக.

*******

கோவை வடக்கு வட்டத்தில் 247 பயனாளிகள் ஏற்கனவே முதியோா் உதவித் தொகை பெற்று வருவதாக வட்டாட்சியா் சமூக பாதுகாப்புத் திட்டம் கோவை வடக்கு தெரிவித்துள்ளாா். மேலும் கோவை தெற்கு வட்டத்தில் மாவட்ட ஆட்சியா் அலுவகத்திலிருந்து மக்கள் குறைதீா்க்கும் முகாம் மூலம் முதியோா் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்களை கிராம நிா்வாக அலுவலா் மற்றும் வருவாய் ஆய்வாளா் விசாரணை செய்து 866 தகுதியுள்ள பயனாளிகளை கண்டறிந்து அவா்களுக்கு உதவித் தொகை வழங்க சமூக பாதுகாப்புத் திட்டம், கோவை தெற்கு வட்டாட்சியரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள மொத்தம் 1113 (866+247) பயனாளிகளுக்கு வறுமைக்கோட்டின் கீழ் உள்ள பட்டியல் எண் வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :- அனுமதிக்கலாம். எண். 1748/2012/எம்.இ. 6.

**<u>மாநகர மன்ற தீா்மானம் எண் 295 நாள் 28.03.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு அனுமதி அளித்து தீா்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 22

பொருள் – பேரூர் சாலை – குமாரபாளையம், தெலுங்குபாளையம், செல்வபுரம், பனைமரத்தூர், பூசாரிபாளையம் வழியாக தடாகம் சாலை இணைப்புத் திட்டச்சாலை

------------

கோயம்புத்தூர் மாநகராட்சி தெற்குமண்டலம் பகுதிற்குட்பட்ட தில்லைநகர், முத்துச்சாமி காலனி, எல்.ஐ.சி காலனி, எஸ்.ஏ.கார்டன். சி.ஜி.வி.நகர். ஹவுசிங யுனிட், சாஸ்தா நகர், கோல்டன் நகர், முனியப்பா நகர், நாராயணசாமி நகர், ஜெயலட்சுமி நகர், தெலுஙகுபாளையம் பகுதி, பனைமரத்தூர், சொக்கம்புதூர், பி.எம்.சாமி காலனி மற்றும் ஆர்.எஸ்.புரம் பகுதிகள் அடஙகிய பல லட்சக் கணக்கான பொது மக்கள் போதுமான வாகனப் போக்குவரத்து வசதி இல்லாமல், பேரூர் சாலை, தடாகம் சாலையை உபயோகிப்பதால் அனுதினமும் போக்குவரத்து நெருக்கடியையும் கோரமான விபத்துகளையும் சந்தித்து வருகின்றனர். இதனைத் தவிர்ப்பதற்கு நகர் ஊரமைப்புத் துறையால் அஙகீகரிக்கப்பட்ட குமாரபாளையம் விரிவு அபிவிருத்தி திட்டம் எண்கள்.1, 2, 3, 6, 9 மற்றும் தெலுஙகுபாளையம் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.2 ஆகியவற்றில் கண்டுள்ள திட்டச் சாலைகளை ( முறையே 80 '' மற்றும் 100'' அடி அகலஙகளைக் கொண்டது.) நிலையிலுள்ள சாலைகளை விஸ்தரிப்பின் மூலமும் புதிதாக தனியார் நிலத்தில் பேச்சுவார்த்தை மூலமும், நிலை எடுப்பு மேற்கொண்டும் பேரூர் சாலை காவல் நிலையம் அருகில் இருந்து வடக்கு நோக்கி நாராயணசாமி நகர் மற்றும் சுப்ரமணிய உடையார் வீதியைக் கடந்து பனைமரத்தூர் வழியாக தொண்டாமுத்தூர் ரோட்டினைச் சந்தித்து கிழக்கு நோக்கி ஆர்.எஸ்.புரம் மாநகராட்சி மேல்நிலைப் பள்ளி அருகில் தடாகம் சாலையினை இணைக்கும் வகையில் உள்ள இச்சாலையினை அபிவிருத்திப் பணிகள் செய்தால் விரிவு படுத்தப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சி போக்குவரத்து நெருக்கடியையும் ஏராளமான விபத்துகளையும் தடுப்பதற்கு வழிவகை உள்ளது.

நகர் ஊரமைப்பு துறையின் விரிவு அபிவிருத்தி திட்டஙகளில் கண்டுள்ள நில ஆர்ஜிதப் பரப்பளவை கணக்கில் கொண்டு உத்தேச மதிப்பீடு நில எடுப்பு மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட உத்தேச திட்டச்சாலைகள் தனியாரிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்து உரிய இழப்பீட்டு தொகை வழஙகிய பின்னர் உள்ளூர் திட்டக் குழுமத்தால் சாலை அமைப்பு செய்து மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டும்.

உத்தேச திட்டச்சாலை, திட்ட வரைபடஙகளில் வரையறுக்கப்பட்ட பகுதியில் 40% பகுதிகள் நிலையில் மண்சாலைகளாக உள்ளது. இதர பகுதிகள் தனியார் வசம் உள்ளது.

| | |
|---|---|
| உத்தேச திட்டச்சாலை நீளம் | 3300 மீ அல்லது 10,999 அடி நீளம் |
| நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய பரப்பளவு | 3,83,404 சதுர அடி |
| சராசரி வழிகாட்டி மதிப்பு | ரூ.1,000 /- மற்றும் 600/- (2011ம் வருட வழிகாட்டு மதிப்பு |
| தோராய நில மதிப்பு | ரூ.18.70 கோடி |

இத்திட்டச் சாலையினை நடைமுறைப்படுத்த உள்ளூர் திட்ட குழுமம் உள்கட்டமைப்பு நிதி மூலம் பெற்று செயல்படுத்தலாம். இத்திட்டச் சாலையினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான போக்குவரத்து வசதியினை, கோயம்புத்தூர் மாநகராட்சியில் வசிக்கும் பல லட்சம் பொதுமக்களுக்கு பலனளிக்கும் வகையில் அமையும். எனவே, மேற்படி திட்டச் சாலைக்கான நிலத்தினை கையகப்படுத்தி சாலை அமைக்கவும், அதற்கான நில மதிப்பீட்டு தொகைக்கு உள்ளூர் திட்டக் குழுமத்தில் நிதி உதவி அல்லது உள்கட்டமைப்பு நிதியின் மூலம் சாலை அமைக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண். 3734/2012/MH5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 296 நாள் 28.03.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 23

பொருள் –உப்பிலிபாளையம் சாலை – திருச்சி சாலை சந்திப்பு குளக்கரை வழியே சிங்காநல்லூர் – வெள்ளலூர் சாலை இணைப்புத் திட்டச்சாலை 'C C' 40'0" – 'B2 B2 ' – 50'0"

------

கோயம்புத்தூர் மாநகராட்சி கிழக்குமண்டலம் உப்பிலிபாளையம் - திருச்சி நெடுஞ்சாலை சந்திப்பு முதல் குளக்கரை வழியே, சிங்காநல்லூர் மற்றும் வெள்ளலூர் ரோடு இணைப்புத் திட்டச் சாலை, சிங்காநல்லூர் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.37ல் அமைகிறது. இந்த உத்தேச திட்டச் சாலை திருச்சி சாலைக்கு தெற்காக 'C C' 40'0" அகலத் திட்டச் சாலையாகவும் அதிலிருந்து கிழக்கே 'B2 B2 ' 50'0" அகலத் திட்டச் சாலையாக வெள்ளலூர் ரோட்டை சென்றடைகிறது.

சிங்காநல்லூர் பகுதியில் வசிப்பவர்கள் மற்றும் சிங்காநல்லூர் வழியே வெள்ளலூர், போத்தனூர், L & T பைபாஸ் சென்றடைபவர்கள் மற்றும் திருச்சி சாலையைப் பயன்படுத்தி செல்பவர்கள் பல லட்சம் மக்கள் திருச்சி சாலை வழியே சிங்காநல்லூர் பழைய ஊர் வழியே வெள்ளலூர் ரோட்டை வந்தடைகின்றனர். இதனால் போக்குவரத்து நெரிசல் சிங்காநல்லூர் பகுதியில் அதிகமாக உள்ளது. இதனால், போக்குவரத்து நெரிசலும், விபத்துகளும் ஏற்படுகிறது.

மேலும், கோவை டவுன் பகுதியிலிருந்து சிங்காநல்லூர் மற்றும் வெள்ளலூர் சென்றடைய திருச்சி சாலை ஒன்றே பிரதான சாலையாக உள்ளது. எனவே, இந்த உத்தேச திட்டச் சாலை 'C C' 40'0" மற்றும் 'B2 B2 ' 50'0" அடித் திட்டச்சாலை உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டச்சாலை க.ச.எண்கள்.**415/1**, **379/2**, **378**, 375, 374, 373, 372, 351, 346, 345/1, 345/2 & **343**. சிங்காநல்லூர் கிராமம் ஆகிய சாலைககளில் அமைகிறது. இச்சாலையின் மொத்த நீளம் **1143.91** மீட்டர். ( **3753**'0" அடிகள்) உள்ளது.

மேற்கண்ட உத்தேச திட்டச்சாலைக்கு உண்டான பரப்புகளில் மானாவாரி இடஙகள், புறம்போக்கு இடஙகள் மற்றும் நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய இடஙகளும் உள்ளது. மேலும், இத்திட்டச் சாலைக்கு மேற்கே உள்ள குளத்திற்கும், குளத்திலிருந்து கிழக்காக செல்லும் வாய்க்காலும் இணைப்புப் பகுதி பெரியபாலம் கட்ட வேண்டிய நிலையும் உள்ளது. மேற்கண்ட உத்தேச திட்ட சாலைக்கான இடத்தை தனியாரிடமிருந்து நில ஆர்ஜிதம் செய்து உரிய இழப்பீட்டுத் தொகை வழஙகிய பின்னர் உள்ளூர் திட்டக் குழுமத்தால் சாலை அமைப்பு செய்து மாநகராட்சிக்கு ஒப்படை செய்ய வேண்டும். 'B2 B2' திட்ட சாலையில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நிலையில் சுமார் **300'0"** அடி நீளத்திற்கு **30**'0" அடி அகலத்திற்கு மண் சாலையாக உள்ளது.

உத்தேச திட்டச் சாலை, திட்ட வரைபடஙகளில் வரையறுக்கப்பட்டுள்ள பகுதியில் தனியார் இடஙகளை நேரடிப் பேச்சுவார்த்தை மூலம் நில ஆர்ஜிதம் செய்து சாலை அமைப்பு மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளது.

**உத்தேச திட்டச்சாலை விபரம்**

| | |
|---|---|
| உத்தேச திட்டச் சாலை நீளம் | **1143.91** மீட்டர் **(3753** அடி**)** |
| நில ஆர்ஜிதம் செய்ய வேண்டிய பரப்பளவு | **1,63,003** சதுர அடி |
| சராசரி வழிகாட்டி மதிப்பு | ரூ. **300 /-(2011**ம் வருடத்தின்படி**)** |
| தோராய நில மதிப்பு | ரூ.**1,64,71,283/-** |

இத்திட்டச் சாலையினை நடைமுறைப்படுத்த உள்ளூர் திட்ட குழுமம் உள்கட்டமைப்பு நிதி மூலம் பெற்று செயல்படுத்தலாம். இத்திட்டச் சாலையினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் பாதுகாப்பான போக்குவரத்து வசதியினை, கோயம்புத்தூர் மாநகராட்சியில் வசிக்கும் பல லட்சம் பொதுமக்களுக்கு பலனளிக்கும் வகையில் அமையும். எனவே, மேற்படி திட்டச் சாலைக்கான நிலத்தினை கையகப்படுத்தி சாலை அமைக்கவும், அதற்கான நில மதிப்பீட்டு தொகைக்கு உள்ளூர் திட்டக் குழுமத்தில் நிதி உதவி அல்லது உள்கட்டமைப்பு நிதியின் மூலம் சாலை அமைக்க மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.3733/2012/MH5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 297 நாள் 28.03.2012</u>**

அலுவலகக் குறிப்பை அனுமதித்து தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 24

**பொருள்:** பணியமைப்பு – கோயம்புத்தூர் மாநகராட்சி – எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டு இணைக்கப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மாநகராட்சி பணிவிதிகளுக்கேற்ப சமமான பதவி வழங்கி பணியிடங்களை ஈர்த்து கொள்ள – மாமன்றத்தின் அனுமதி பெற்று அரசுக்கு கருத்துரு அனுப்ப அனுமதி வேண்டுதல் தொடர்பாக.

---

அரசு ஆணை எண். 786 ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை நாள்.30.04.1981ன்படி கோயம்புத்தூர் நகராட்சியினை மாநகராட்சியாக நிலை உயர்த்தப்பட்டு 12.12.1996 முதல் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு மொத்தம் 72 வார்டுகளுடன் செயல்பட்டு வந்த நிலையில் அரசு ஆணை எண். 114 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (தேர்தல்) துறை நாள்25.08.2011 ன்படி மூன்று நகராட்சிகள், ஏழு பேரூராட்சிகள் மற்றும் ஒரு ஊராட்சி கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் ஒருஙகிணைக்கப்பட்டு ஏற்கனவே செயல்பட்டு வரும் நான்கு மண்டல அலுவலகஙகளுடன் ஒன்று கூடுதலாக சேர்க்கப்பட்டு ஐந்து மண்டலஙகளாக அரசாணை (நிலை) எண்.140, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (தேர்தல்) துறை நாள்.15.09.2011 ன்படி மேற்கண்ட 11 மூன்றாம் நிலை நகராட்சிகள் / பேருராட்சிகள்/ ஊராட்சிகள் இணைக்கப்பட்டு 100 வார்டுகளாக உயர்த்தப்பட்டுள்ளது. தற்போது ஐந்து மண்டலஙகளிலும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அரசாணை நிலை எண்.77, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மா.ந.4) துறை நாள்.13.05.1998 ன்படி கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு தமிழ்நாடு மாநகராட்சிப் பணிவிதிகள் 1996ன்படி சில பணியிடஙகளை ஒருஙகிணைத்தும், புதிய பணியிடஙகள் தோற்றுவித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், அரசாணை எண்.237, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை நாள்.26.09.1996ல் வெளியிடப்பட்ட தமிழ்நாடு மாநகராட்சிப் பணிவிதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள பணியிடம் நியமனம் தொடர்பான வழிமுறைகள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அரசாணைகளின்படி எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடஙகளுடன் 3 நகராட்சிகள், 7 பேரூராட்சிகள், 1 ஊராட்சியில் அனுமதிக்கப்பட்ட 477 பணியிடஙகளையும் மாநகராட்சிப் பணியிடஙகளாக ஈர்த்துக் கொள்ளவும், அப்பணியிடஙகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களில் நகராட்சி/பேரூராட்சி/ஊராட்சிப் பணிக்கு செல்ல விருப்பம் தெரிவித்த பணியாளர்களைத் தவிர்த்து மாநகராட்சிப் பணிக்கு வர விருப்பம் தெரிவித்த 375 பணியாளர்களை இணைப்பில் கண்டுள்ளபடி மாநகராட்சிப் பணி விதிகளின் கீழ் ஈர்த்துக் கொள்ளவும், அவ்வாறு ஈர்த்துக் கொள்ளும் பொழுது சில பணியிடஙகளுக்கு நிபந்தனைகளுடன் விதித்தளர்வு செய்தும் ஒரு சில பணியிடஙகளின் பதவி பெயர்களை மாநகராட்சிப் பணி விதிகளில் உள்ளது போல் பெயர் மாற்றம் செய்யவும் அரசின் ஆணை பெற நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** எல்லை விரிவாக்கம் செய்யப்பட்ட கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பணியிடஙகளுடன் 11 நகராட்சி/ பேரூராட்சி/ ஊராட்சிக்கு அனுமதியளிக்கப்பட்ட 477 பணியிடஙகளை ஈர்த்துக் கொள்ளவும், அவ்வாறு ஈர்த்துக் கொள்ளும் பொழுது சில பணியிடஙகளுக்கு நிபந்தனைகளுடன் விதித்தளர்வு செய்தும் ஒரு சில பணியிடஙகளின் பதவிப் பெயர்களை மாநகராட்சிப் பணி விதிகளில் உள்ளது போல் பெயர் மாற்றம் செய்யவும் உரிய ஊதிய ஏற்றமுறை நிர்ணயம் செய்யவும் (To fix Appropriate Time Scale of Pay) அரசின் ஆணை பெற நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக கருத்துரு அனுப்ப மாமன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

**ந.க.எண்.5734/2011/எம்.சி.2**

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 298 நாள் 28.03.2012</u>**

அலுவலகக் குறிப்பிற்கு ஒப்புதல் வழஙகி தீர்மானிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 25

மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் பேருந்து நிறுத்தும் இடங்கள் தனியார் பஙகளிப்புடன் பயணிகள் நிழற்குடை அமைக்கவும் ஆண்டு குத்தகை அடிப்படையில் ஐந்து விளம்பர நிறுவனஙகளுக்கு மூன்று ஆண்டுகளுக்கு மேலும் கால நீட்டிப்பு அனுமதி மாமன்றத்தால் தீர்மான எண்.94, நாள். 30.09.2009 மற்றும் 24, நாள்.23.04.2010 ல் அனுமதி வழஙகப்பட்டு உள்ளது. இதன் அடிப்படையில் தற்போது மாநகராட்சியால் புதிதாக சேர்க்கப்பட்ட 11 உள்ளாட்சி பகுதிகளிலும் தனியார் பஙகளிப்புடன் ஏற்கனவே மாமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட அதே நடைமுறையில் பயணிகள் நிழற்குடை கீழ்கண்ட பகுதிகளில் அமைக்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

1. மேட்டுப்பாளையம் சாலை (துடியலூர் வரை).
2. வடவள்ளி சாலை
3. அவினாசி சாலை (மாநகராட்சி எல்லை வரை).
4. அவினாசி சாலை சந்திப்பு முதல் நேரு நகர் வரை
5. பொள்ளாச்சி சாலை (மாநகராட்சி எல்லை வரை).
6. பாலக்காடு சாலை (மாநகராட்சி எல்லை வரை).
7. போத்தனூர் சாலை.
8. சத்தி ரோடு ((மாநகராட்சி எல்லை வரை)
9. சரவணம்பட்டி முதல் துடியலூர் சாலை வரை
10. திருச்சி சாலை (ஒண்டிபுதூர் வரை).
11. விளாஙகுறிச்சி to சத்தி ரோடு.
12. காளப்பட்டி மெயின் ரோடு. (அவிநாசி ரோடு முதல் சத்திரோடுவரை
13. விளாஙகுறிச்சி to கணபதி ரோடு.
14. விளாஙகுறிச்சி to சரவணம்பட்டி ரோடு.

அலுவலகக் குறிப்பு : மேற்காணும் இடஙகளில் தனியார் பஙகளிப்புடன் பயணிகள் நிழற்குடை அமைக்கவும் ஆண்டு குத்தகை அடிப்படையில் ஏலம் விடவும் மாமன்றத்திற்கு பொருள் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3735/2012/MH5

**<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 299 நாள் 28.03.2012</u>**

பொருளில் குறிப்பிட்டுள்ள 14 இடங்களில் தனியார் பங்களிப்புடன் பயணிகள் நிழற்குடை அமைக்கவும், ஆண்டு குத்தகை அடிப்படையில் ஏலம் விடவும் தீர்மானிக்கப்பட்டது. மேலும் கூடுதல் நிழற்குடை தேவைப்படுமானால் அதையும் சேர்த்துக்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

---

**(ஒப்பம்) செ.ம.வேலுசாமி**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**